குறள்நெறி

-குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்-

மின்னிதழ்:122-மார்கழி-17---தி.பி.2056   சனவரி—1--- பொ.ஆ.2026

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்

இலக்குவனார் வழங்கும் பொங்கல் வாழ்த்து

வாழ்க தமிழ்மொழி வளர்க குறள்நெறி

உழவர் திருநாள் புலவர் பெருநாள்

மக்கள் மகிழ்நாள் வண்டமிழ்ப் பொங்கலில்

எடுக்கும் சூளுரை இன்றமிழ் போற்றலே

பொங்குக பாலே பொலிக நம்வளம்

பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரந்து வையகம்

குறள்நெறி போற்றிக் கூடி வாழ்கவே

குறள்நெறி மலரவும் குடியரசோங்கவும்

ஆற்றுவோம் தொண்டே அனைவரும் வம்மின்!

சிறப்பாசிரியர் குழு: முனைவர் பொற்கோ (முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்) முனைவர் இ.சுந்தரமூர்த்தி (முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்) முனைவர் இர.பிரபாகரன் (மேரிலாந்து,அமெரிக்கா) முனைவர் அன்புசெயா (சிட்னி,ஆத்திரேலியா) பாவலர் முரசு நெடுமாறன் (மலேசியா) பேரா.மன்னர்மன்னன் (மலேசியா) பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ (பிரான்சு)கவிஞர் அழ.பகீரதன் (இலங்கை) கலாநிதி சயந்தினி விக்னராசன் (இலங்கை) பொறியாளர் ச.இராசகுமாரன் (அயர்லாந்து) எலியாசு (சிங்கப்பூர்)திருமதி.மதிவதனி பத்மநாதன் (சுவிட்சர்லாந்து) திருமதி.தாமரை சீனிவாசராவ் (கம்போடியா) முனைவர் இராம சுந்தரம் (கொரியா) தீனதயாளன்(கனடா) பேராசிரியர் தமிழியலன் (சென்னை) இணையாசிரியர்; பாவலர் செல்வ.மீனாட்சிசுந்தரம் பொறுப்பாசிரியர்: மறைமலை இலக்குவனார்

திருக்குறள் உணர்த்தும் மழைநீர் சேமிப்பு

தமிழ்ப் பொறியாளர் கெ. பக்தவத்சலம்

(செயலாளர், ஒய்.எம்.சி.ஏ. பட்டி மன்றம்)

ஓர் அரை நூற்றாண்டுக் காலம் சென்னை ஒய்.எம்.சி.ஏ.பட்டிமன்றச் செயலாளராகப் பணியாற்றித் தமிழ்நாட்டின் அனைத்துத் தமிழறிஞர்களையும் அழைத்து இலக்கிய இலக்கண பண்பாட்டு வரலாற்றுத் துறைகளில் பொழிவுகளும் கருத்தரங்குகளும் நிகழ்த்தித் தமிழ் மறுமலர்ச்சிப் பணியாற்றிய பெருந்தகை பக்தவத்சலனார் தமது பணிகளுக்கிடையே குறள்நெறிக்காக எழுதிக்கொடுத்த பெருமைக்குரிய கட்டுரைஅவர் மறைவுக்குப் பின்னும் அவர்தம் புலமையையும்குறள்நெறியில் அவர் கொண்டிருந்த அழுத்தமான ஈடுபாட்டையும் புலப்படுத்தி அமைந்துள்ளது.

இந்திய தேசிய நூலாக ஏற்கப் பெறும் செந்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறள், "எல்லாப் பொருளும் இதன்பால் உள" என்னும் பெருமைக்குரிய தலைசிறந்த கலைக் களஞ்சியமாகவும் திகழ்கின்றது. இந்நிலையில், திருக்குறளை வாழ்வியல் வழிகாட்டியாகக் கடந்த ஐம்பதாண்டுகளாக ஆர்வமுடன் பயின்றுவரும் தமிழ்ப் பொறியாளனாகிய எனக்கு அண்மையில் ஒரு கடிதம் வந்தது.

அக்கடிதத்தில், "திருக்குறளில் எல்லாப் பொருளும் இருப்பதாகப் பாராட்டுகிறார்களே! அண்மைக்காலத்தில், நம் நீரடெங்கும் குறைந்து வரும் நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்த வீடுகள் தோறும் அமைக்கப்படும் 'மழைநீர் சேமிப்புத் திட்டம்' பற்றிய குறிப்புகள் திருக்குறளில் உள்ளனவா?" என்று ஒரு நண்பர் பரிவோடு வினைவியிருந்தார்.

அவருக்கு நான் எழுதிய பதிலிற் பதித்திருந்த திருக்குறள் மணிகளின் விளக்கத்தினை, நீங்களும் படித்துப் பாருங்களேன்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்தினை அடுத்து இரண்டாவது அதிகாரமாக, மழையின் பெருமையினை, "வான்சிறப்பு" என்று பாயிரம் பாடியவர் திருவள்ளுவர்.

பருவமழை தவறாமல் பெய்தால்தான் உலகத்தில் உயிர்கள் வாழும்; அவ்வாறு மழை இடையறாமல் பெய்வதால்தான், உலகம் தோன்றிய நாள் தொடங்கி இன்றுவரை நிலை பேறுடையதாக விளங்குகிறது.

உயர்திணையாகிய மனிதர்களும், அஃறிணையாகிய விலங்கினங்களும், தாவரங்களும், ஏன், கண்ணுக்குத்தெரியாத நுண்ணுயிரிகளும் கூட, நிலத்தில் மட்டுமல்லாது நீரினும். உயிர்வாழ்வதற்கு, விண்ணிவிருந்து பொழியும் மழை இன்றியமையாதது . வானத்திலிருந்து வீழ்வதால் மழைக்கு, "வானம்" என்பதே வள்ளுவர் வழங்கிய தமிழ்ப் பெயர். வானத்தில் தூய்மையின் வடிவமாகத் தோன்றி, மண்ணில் பெய் எனப் பெய்யும்' மாரியாகப் பொழிந்து, மன்பதையைக் காக்கும் மழைக்கு 'அமிழ்தம்' என்ற பெயரைச் சூட்டுகிறார் திருவள்ளுவர்.

அமிழ்தம் சாவாமருந்து, அது வானத்தில் உட்டுமே கிடைப்பது, அமிழ்தத்தை உண்டவர் சாவாமல் நிலைபெறுவர் என்பது நம்பிக்கை. விண்ணிலிருந்து மண்ணுக்கு வரும் மழையால் உலகமும் மறையாது. காலத்தை வென்று நிலைத்து நிற்பதால், 'வானை அமிழ்தமென்று உணர்க' என்று வான்சிறப்பின் எடுத்த எடுப்பிலேயே அறிவுறுத்துகிறார் திருவள்ளுவப் பேராசான்.

"வான்-நின்(று) உலகம் வழங்கி வருதலான் தான்-அமிழ்தம்

என்று உணரற் பாற்று" (திருக்குறள் -11]

'வாராது வந்த மாமருந்தாம் மழைநீர், நிலத்தில் வீழ்ந்து திரிந்து வீணாகிப் போகிறதே' என்று மனம் வருந்துகிறார் திருவள்ளுவர்.

'நிலத்தின் தன்மையால் நீரானது தன்நிறம், சுவை முதலியன வேறுபட்டு, அந்நிலத்தின் தன்மையாக மாறும். அதுபோல, மக்களுக்குத் தாம் சேர்ந்த இனத்தின் தன்மையாக அறிவு மாறுபடும்' என்னுங் கருத்தமைய, 'சிற்றினம் சேராமை' என்னும் அதிகாரத்துள்

"நிலத்தியல்பான் நீர்திரிந்(து) அற்றாகும்"

(திருக்குறள் -452]

என்று தம் உள்ளக்கிடக்கையை, எடுத்துக் காட்டு உவமையாக்குகிறார் திருவள்ளுவர் பெருந்தகை.

திருவள்ளுவரின் மாசுக் கட்டுப்பாட்டுச் சிந்தனையின் முதற்படியாக, இந்தக் குறட்பாவினைக் கொள்ளலாம். ஆற்றில் மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கெடுத்துப் பாய்ந்தோடிக் கடலிற் சென்று கலந்து, குறுகிய காலத்தில் வீணாகும் மழைநீரைத் தடுத்து நிறுத்தி, ஆண்டு முழுவதற்கும் வேளாண்மை நீர்ப் பாசனத்திற்குப்

பயன்படுத்தும், பொதுமைப் பொறியியல், நீர்வள மேலாண்மைச் செயற்பாடே அணைக்கட்டுகளை வடிவமைக்க மூல காரணமாயிற்று.

சென்னை முதலிய பெருநகரங்களில், மழைக் காலங்களில் வீதியெல்லாம் வெள்ளக் காடாவதைக் தடுக்க, மழைநீர் வடிகால்கள் பெருமளவில் கட்டப் பெறுகின்றன. தெருவில் உபரியாகத் தேங்கும் நீரும், வீடுகளின் கூரைகளில் வழிந்தோடும் மழைநீரும், வீழ்குழாய்கள் வழியே, மழைநீர்க் கால்வாய்களோடு இணைக்கப் பெறுகின்றன. இவ்வாறு வீதிகளிலும், வீடுகளின் முற்றத்திலும் சேரும்நீர். புழுதி கரைந்த சேறாக அழுக்கேறிய நிலையில், யாருக்கும் பயன்படாமல், கடைசியில் கடலிற் சென்று கலக்கிறது.

நகரங்களில் சிமெண்டு, தார் பாவிய சாலைகளில், மழைநீர் வழிந்தோடுவதனால், பூமியில் போதுமான நீர் உறிஞ்சப் பெறாது, நிலத்தடி நீர்பிடிப்புக்கு நேர்மாறான சூழல் நேர்கிறது. இதனால் நகரிலுள்ள கேணிகள், கிணறுகள். நிலத்தடி நீர் ஆதாரங்கள் முதலியன பெரிதும் வற்றி, மக்களின் குளித்தல், துணி துவைத்தல், கழுவுதல், தோட்டங்களுக்கு நீர்பாய்ச்சுதல் முதலிய எல்லா நீர்த் தேவைகட்கும், பாதுகாக்கப்பட்ட, பெரும் பொருட்செலவில் தூய்மையாக்கப்பட்டுக் குழாய்கள் வழியே நகராட்சி மற்றும் குடிநீர் வாரியம் போன்ற நீர்வழங்கு நிறுவனங்கள் வழங்கும் நீரையே எதிர்பார்க்கும் நிலை நீடிக்கிறது இவ்வாறு வீணாகும் மழை நீரைப் பெருமளவில் சேமித்து, நம்வீட்டு நிலத்தடி நீர் ஊற்றுக் கண்களுக்கு, ஊட்டச் சத்தூட்டும் திட்டம்தான், மழைநீர் சேகரிப்புத் திட்டமாக மலர்ந்துள்ளது. இதனையே ஆங்கிலத்தில் 'மழைநீர் அறுவடை' (Rainwater Harvesting) என்றும் சொல்வார்கள்!

'நிலத்தியல்பான் நீர் திரி' வதனை. அறிவியற் கண்ணோட்டத்தோடு உவமையாகக் காட்டிய திருவள்ளுவர் 'தூய்மையில்லாத முற்றத்தில் மழைநீர் பொழிந்து, மாசாகி, வீணாவதைத் தடுக்க வேண்டும்' என்ற கருத்தினையும் கொண்டிருந்தார் என்பதனைக் குறிப்பால் உணர்த்துகிறது மற்றொரு குறட்பா.

'தம்மைப் போன்று கற்றார் இல்லாத மற்றையோர் அவையில் ஒன்றையும் சொல்லுதல் கூடாது. அப்புல்லவையுள் சொல்வராயின், அது தூய்மையில்லாத முற்றத்தில் அமிழ்தத்தினைக் கொட்டியது போலும்' என்பது திருக்குறளில் 'அவை அறிதல்' என்னும் அதிகாரத்துள் நிறைவாக விளங்கும் குறள்.

"அங்கணத்துள் உக்க அமிழ்(து) அற்றால், தம்கணத்தர்

அல்லார்முன் கோட்டி கொளல்" [திருக்குறள் -720]

அங்கணம் என்பது வீட்டு முற்றம், சாக்கடை என்றும் கூறுவர். முற்றத்தை, 'முன்றில்' என்று பழந்தமிழ் வழங்கும். இல்லத்தின் முன்னேயுள்ள பகுதி என்னும் பொருளில், 'இல்முன்' என்பது. முன்றில் என முன்பின்னாக மாறியது இலக்கணப் போலி எனப்படும்.

‘சாவா மருந்தாதல் அறிந்து, நுகர்வார் கையினும் படாது. அவ்வங்கணத்துக்கு இயைபின்றிக் கெட்டவாறு தோன்ற, 'உக்க அமிழ்தென்றார்' என்று இக்குறளுக்குப் பரிமேலழகர் பதசாரங் கூறுவர்.

முதலில்

"வான்நின்(று) உலகம் வழங்கி வருதலால்

தானமிழ்தம் என்(று) உணரற் பாற்று."

என்ற திருக்குறளில், 'மழையினை அமிழ்தம் என்று எண்ணத்தாக்கதாகும்' என்று கூறிய கருத்தோடு, 'அக்கணத்துள் உக்க அமிழ்து' என்ற குறளைப் பொருத்திப் பொருள் கொண்டால், 'திருக்குறள் உணர்த்தும் மழைநீர் சேமிப்பு' பற்றிய, காலத்திற்கேற்ற புதுப்பொருள், தானே வந்தமையக் காணலாம்.

மழை விண்ணமிழ்து; நிலவு தண்ணமிழ்து; பசுவின் பால் வெண்ணமிழ்தம்! காட்டுக்கெரித்த கதிர் நிலவைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. கெட்டுவிட்ட பாலைச் சாக்கடையில் கொட்டுவதே வழக்கம், ஆனால் தூய உருப்பளிங்கு போன்ற மழைநீர் அமிழ்தத்தினை, மாசுநீக்கி, நிதான வடிகட்டி முறையில், நிலத்தடி நீர் மட்டத்துள் செலுத்தி, மீண்டும் பயன்படச் செய்வதுதான், மழைநீர் அறுவடை! இத்திட்டத்திற்கு வித்திட்டவர் திருவள்ளுவர். வினைத்திட்பத்தோடு, வடிவமைத்துச் செயற்படுத்தியவர்கள் மக்கள் நல்வாழ்வுப் பொறியாளர்கள்.

உங்கள் கவனத்திற்கு

குறள்நெறி இணைய இதழ்களின் வெளியீட்டுநாள்களில் மாற்றம்:

இனி ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல்நாள்–குறள்நெறி

எட்டாம் நாள்-குறள் முழக்கம் பதினைந்தாம் நாள்-குறள்விருந்து

இருபத்திரண்டாம் நாள்: Thirukkural Express

ஏற்ற நெறி!எளிய நெறி!

டாக்டர். வ.சுப.மாணிக்கம்.

ஒல்லும் வகையான் அறவினை ஓயாதே
செல்லும் வாயெல்லாம் செயல்.(33)

இக்குறளில் அவர் நெகிழ்ச்சியைப் பாருங்கள். ஒல்லும் வகையான் எனவும், செல்லும் வாய் எனவும் அறஞ்செய்வான் நோக்கத்திற்கு எவ்வளவு தாராளமாக விட்டுக் கொடுக்கின்றார்? தலைமேல் புல்லுக்கட்டை இறக்க உதவுவதும், ஆட்டின் கால் முள்ளை அணைத்து எடுப்பதும், முதியோர்க்கு இடங்கொடுத்து செல்வதும், இவ்வண்டி என வினவினார்க்குச் சலிப்பின்றி அறிவுறுத்தலும் எல்லாமே சிறு வினையாயினும் அறிவினையல்லவா? வள்ளலிடம் சென்றான் வறியனாய்த் திரும்பான்; வள்ளுவரைக் கற்றான் வாழாதிரான். வள்ளல் எப்படியும் கொடுப்பான்; வள்ளுவர் எப்படியும் வாழ்விப்பார்.

வாழ்வின் உயர்வுக்கு இன்னவளவு பொருளாதார அடிப்படை வேண்டும் எனப் பலர் மயங்கி எண்ணம் தடுமாறிச் சோர்வடைகின்றனர். உள்ள நிலையை மேலும் குள்ள நிலையாக்கிக் கொள்கின்றனர். உயர்வுக்குப் புறவடிப்படை வேண்டாம் என்பது வள்ளுவம். உயர்வாக வேண்டும் என்றால், வேண்டும் என்ற எண்ணம் வேண்டும்; அவ்வெண்ணத்தைத் திரும்பத் திரும்ப எண்ண வேண்டும்; எண்ணப்பித்து வேண்டும்; இதுவே உயர்வுக்கு வள்ளுவர் காட்டும் நெறி.

உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.(592)

எந்தப் பொருளடிப்படை வேண்டும் என நாம் நினைக்கிறோமோ அதனை வள்ளுவப் பேராசிரியரின் பொருளே தகரக் கூடிய அடிப்படை என இகழ்வதைக் காணுங்கள். உலகில் பொருளுடையாரெல்லாம் உயர்ந்து விடவில்லையே; பொருளிலாரெல்லாம் தாழ்ந்துவிடவில்லையே. பொருளாளர் தாழவும் பொருளிலார் உயரவும் காண்கின்றோம். ஆதலால் உயர வேண்டும் என்ற ஊக்கமே நல்வாழ்வுக்கு அடிப்படை என்பர் ஆசிரியர். இதனைவிட உயர்வுக்கு எளியநெறி காட்ட முடியுமா? திருக்குறள் காட்டும் வழி ஏற்ற நெறி மட்டுமன்று; செய்தற்கு எளிய நெறியுமாம்.

பொதுப் புத்தாண்டு 2026 நன்றே மலர்க

திருவள்ளுவர் ஆண்டு 2057 தமிழ்மொழியும் தமிழர் நலனும் சிறந்தோங்கி செம்மையும் நன்மையும் வளமையும் பொங்கச் செய்யும் சிறந்த காலமாக மிளிர்ந்திட குறள்நெறி இணைய இதழ் ஆசிரியர் குழு வாழ்த்துகிறது.